திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், ஆதியூர் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தனியார் பள்ளி வளாகத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 442 நபர்களுக்கு பொதுப்பணிகள் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இதில் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர்கள் திருப்பத்தூர் அ.நல்லதம்பி, ஆம்பூர் அ.செ.வில்வ நாதன் ,மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என்.கே .ஆர் சூரியகுமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி சிறப்புரையாற்றினார். உடன் சுற்றுச்சூழல் அணி மாநிலதுணை செயலாளர் ஆர்.வினோத்காந்தி, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட துணை செயலாளர்கள் சிவானந்தம், துரை மஸ்தான்,கே.குமுதா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணையன், கே.சுந்தரம், அ.அசோகன், எம்.எஸ்.கலைமணி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் சிறப்புரை!

தென்காசியில் 3வது பொதிகை புத்தகத் திருவிழா!

வே.ஜெயபாலன் – ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தென்காசி.நவ.18-

தென்காசியில் 3 வது பொதிகை புத்தகத் திருவிழாவின் துவக்க விழா (15.11.2024) இ.சி.ஈ.ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் தென்காசி மாவட்ட கண்காணிப்பு அலுவலர், பொது நூலக இயக்குனர் முனைவர் பொ. சங்கர்,தென்காசி மக்களவை உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். பழனி நாடார் (தென்காசி) சதன் திருமலை குமார் (வாசுதேவநல்லூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் சீ. ஜெயச்சந்திரன் வரவேற்புரை யாற்றினார்.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று புத்தகக் கண்காட்சியை துவக்கி வைத்து ஒவ்வொரு அரங்குகளாக பார்வையிட்டார்.

பின்னர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை மற்றும் துணை முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாட்டில் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊராட்சிகளிலும் நூலகங்களை உருவாக்கித் தந்த பெருமை முதலமைச்சர் அவர்களை தான் சாரும்.மேலும் முதலமைச்சர் அவர்கள் நூலகங்களுக்கு புத்தகங்களை வழங்கி வருவதன் மூலம் அனைத்து தரப்பு மாணவ, மாணவியர்களும் பயனடைந்து வருகின்றனர். பெண் கல்வியை ஊக்கப்படுத்திடும் பொருட்டு டாக்டர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருமண உதவித் தொகை திட்டத்தினை செயல்படுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் மாணவியர்களும் உயர் கல்வி பயில வேண்டும் என்பதனை உருவாக்கிடும் பொருட்டுபுதுமைப்பெண் திட்டத்தினை செயல் படுத்தி மாதந்தோறும் ரூ.1000/- வழங்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே தலைசிறந்த திட்டமாக புதுமைப்பெண் திட்டம் திகழ்ந்து வருகிறது. அதன் அடிபடையில் இல்லம் தேடி கல்வி திட்டம் ஆரம்பப்பள்ளி பயிலும் மாணவ,மாணவியர்களின் அடிப்படைத் திறன்களை மேம்படுத்தும் வகையில் எண்ணும் எழுத்தும் திட்டம்,நாளைய சமுதாயம் வெறும் ஏட்டுக் கல்வியாக மட்டும் அல்லாமல் பல் திறன் வளர்க்கும் கல்வியாக மேம்படுத்திட வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு முதல்வரின் கனவுத் திட்டமான நான் முதல்வன் திட்டம், ஸ்மார்ட் கிளாஸ் போன்ற பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க புத்தக வாசிப்பை ஒரு மக்கள் இயக்கமாக எடுத்துச் செல்ல,சென்னை புத்தகக் கண்காட்சி போன்று தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.அதனடிப்படையில் தென்காசி மாவட்டத்தில் மூன்றாவது பொதிகை புத்தகத் திருவிழா இன்றைய தினம் துவக்கப்பட்டுள் ளது.இப்புத்தகத் திருவிழா 15.11.2024 அன்று முதல் 24.11.2024 வரை 10 நாட்கள் நடைபெறுகிறது.

எத்தனையோ நிகழ்வுகள் அரசு சார்பாக நடந்தாலும்,வெவ்வேறு விதமாக நடந்தாலும்,அறிவுப்பசி போக்கும் நிகழ்வாக தளபதி அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் தான் மாவட்டந்தோறும் இதுபோன்ற புத்தகத் திருவிழா நடைபெறுகிறது. இது போன்ற புத்தக திருவிழாவை பார்ப்பதற்கு பள்ளி, கல்லூரி, மாணவர், மாணவியர்கள் மற்றும் சிறுவர்கள் திரளாக வர வேண்டும்.உயர்ந்த எண்ணத்தோடு முதலமைச்சர் அவர்கள் இதனை செயல்படுத்தி வருகிறார்கள்.

சென்னையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நூலகத்தை துவக்கி வைத்தார்கள்.நம் முதலமைச்சர் அவர்கள் மதுரையில் பிரமாண்டமான நூலகத்தை துவக்கி வைத்தார்கள். சிறுவர்கள் முறை பெரியவர்கள் வரை வயிற்றுக்கும் உணவு வழங்க வேண்டும். அதேபோல் சிறுவர் முதல் பெரியவர் வரை அறிவு சார்ந்த வளர்ச்சியும் வேண்டும் என்பது அரசின் கடமை.

நம் முதலமைச்சர் அவர்கள் எதைச் செய்தாலும் காரிய காரணங்கள் இருக்கும். அறிவு சார்ந்த குழந்தைகளை நாம் வளர்க்க வேண்டும்.

தமிழ்நாடு உயர்ந்தது என்று சொல்ல வேண்டும். திராவிட ஆட்சி வந்த பிறகுதான் கையில் புத்தகம் உருவாகியது.புத்தகத்தில் நல்ல கருத்துக்களை தெரிந்து கொள்ளலாம். இந்த ஆட்சியோடு சேர்ந்து நீங்கள் பயணிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்தாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ மாணவியர்களை அறிவு சார்ந்த சமுதாயமாக உருவாக்கிடும் பொருட்டும்,அவர்களது கல்வித் தரத்தினை மேம்படுத்துகின்ற வகையில் பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள்.ஒரு நூலகத்தில் நாம் படிப்பதன் மூலம் நமது அறிவுத்திறன் மற்றும் சிந்தனைத் திறன் ஊற்றாக எடுக்கும்.

இப்புத்தகங்களை வாசிக்கின்ற போது அறிஞர்களுடைய புத்தகங்களும், நமது தமிழறிஞர்கள் எழுதிய புத்தகங்களும், எழுதிய கவிதைகளும், அவரவர்களுக்கு எதிர்காலத்தில் ஒருவிதத்தில் ஒரு துறையில் பயன் உள்ளதாக அமையும்.நூலகங்களில் இந்தியாவிலேயே தலைசிறந்த நூலகமாக கன்னிமாரா நூலகம் ஒரு காலத்தில் போற்றப்பட்டது.ஆனால், டாக்டர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது உருவாக்கப்பட்ட நூலகம் ஆசியாவிலேயே சிறந்த நூலகத்தினை உருவாக்கிய பெருமை டாக்டர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத் தான் சாரும். சென்னையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் ஒரு புதிய நூலகத்தினை நிறுவி பெரிய மேதைகளை உருவாக்கித் தந்து அனைத்து மாணவ,மாணவியர் களும் கல்வி பயில்வதற்கு இந்நூலகம் ஒரு வாய்ப்பாக அமைந்தது. இன்றைக்கும் இந்நூலகம் உயர்ந்து நிற்கிறது. டாக்டர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சமூகத்திற்காக தமிழ், தமிழ்நாடு, தமிழகம், தமிழ் பண்பாடு, கலாச்சாரம், இலக்கியம், அரசியல் அனைத்திலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு உழைத்து தலைசிறந்து விளங்கியதை நாடு நன்றாக அறியும்.இன்றைக்கு உலக மொழியாக இருக்கக் கூடிய தமிழ் மொழியில் திருக்குறள் இயற்றிய திருவள்ளுவர் அவர்களுக்கு கன்னியாகுமரியில் திருவள்ளுவரின் சிலையை வானுயரத்திற்கு அமைத்துத் தந்தவர் டாக்டர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான்.புத்தகங்களை நாம் படிப்பதன் மூலம் நமது அறிவினையும் நமது திறனையும் மேம்படுத்திக் கொள்ள முடியும்.

இப்புத்தகத்திருவிழாவில், பல்வேறு முக்கிய பிரமுகர்களின் பட்டிமன்றங்கள், சிறப்புரைகள், கலைநிகழ்ச்சிகள் தினந்தோறும் நடைபெறவுள்ளது.

மேலும், இப்புத்தகத்திருவிழாவில், 60க்கும் மேற்பட்ட அரங்குகள்,10க்கும் மேற்பட்ட அரசுத்துறை சார்ந்த அரங்குகள்,பாரம்பரிய உணவக அரங்குகள்,சிறுவர்களுக்கான பொழுது போக்கு அம்சங்கள் மற்றும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு விதமான போட்டிகள் நடைபெறவுள்ளது.மாணவ, மாணவியர்களுக்கு கல்வி பயில்வது ஒன்றே சிறந்த செல்வமாகும். எனவே,பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் 10 தினங்கள் நடைபெறும் இப்புத்தகத் திருவிழாவில் கலந்து கொண்டு அறிவு சார்ந்த புத்தகங்களை அதிக அளவில் வாங்கி அறிவுத்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் மாணவ, மாணவியர்களுக்கு தேவையான அனைத்து புத்தகங்களையும் வாங்கிக் கொடுத்து புத்தகத்திரு விழாவினை சிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் துறை,சமூக நலத்துறை, நூலகத்துறை, காவல்துறை, தமிழ் வளர்ச்சித்துறை போன்ற துறைகளின் மூலம் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் முருகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசன், மாவட்ட தென்னிந்திய புத்தக விற்பனை யாளர் மற்றும் பதிப்பாளர் சங்க செயலாளர் முருகன், தென்காசி மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் உதயகிருஷ்ணன், தென்காசி ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவர்கள் கனகராஜ் முத்துப்பாண்டியன், ஐவேந்திரன் தினேஷ், தென்காசி நகர்மன்ற தலைவர் ஆர்.சாதிர்,துணைத் தலைவர் சுப்பையா, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் திவ்யா மணிகண்டன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லத்துரை, ஆறுமுகச்சாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் சாமிதுரை,ரஹீம்,ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், ஜெயக்குமார், சீனித்துரை, பேரூர் செயலாளர்கள் குற்றாலம் குட்டி, சுடலை, முத்தையா, அரசு வழக்கறிஞர் வேலுச்சாமி, அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, ரமேஷ்,கருப்பணன் அரசு அலுவலர்கள்,கழக நிர்வாகிகள், பொதுமக்கள்,பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நெல்லை பாளையங்கோட்டை வி.எம்.சத்திரம் எஸ்.டி.ஆண்டனி பப்ளிக் ஸ்கூலில் மாணவச் செல்வங்கள் உருவாக்கிய கலை, அறிவியல் பொருட்கள் கண்காட்சியை பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் துவக்கி வைத்தார். நிகழ்வில் துரை பாண்டியன், சாய்பாபா,பாளை பகுதி இளைஞரணி புஷ்பராஜ், பேட்டை கனி,மானூர் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் கானார்பட்டி சாமுவேல்,பாளை சதீஷ்,முருகன் உள்பட பள்ளி தலைமை ஆசிரியர்,ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி

மருத்துவமனையில் ரூ.1.75 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்!

நெல்லை.நவ.18.

நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 23 படுக்கையில் கொண்ட கட்டண பிரிவு ரூபாய் 1.10 கோடியிலும்,மருத்துவமனையில் பெண் மாணவியர்கள்,மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்படுத்தும் வகையில் 5 தனி அறைகள் ரூபாய் 15 லட்சம் மதிப்பிலும், ரெட்டியார்பட்டி வட்டார பொது சுகாதார அலகு 50 லட்சம் மதிப்பிலும்,ஆக மொத்தம் ரூபாய் 1.75 கோடி மதிப்பிலான முடிவுற்ற பணிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது.

தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி அமைந்த பின்னர் மருத்துவமனைகளில் கட்டண படுக்கை வசதி அமைக்கும் திட்டங்கள் தொடங்கப்பட்டு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்று வருகிறது. சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் மட்டும் செயல்பட்டு வந்த இந்த திட்டம் படிப்படியாக மதுரை,கோவை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு 10 வது இடமாக நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 18 அறைகள் கொண்ட கட்டண படுக்கை வசதி மையம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதில் 1 நபர் தங்கி சிகிச்சை பெறும் வசதி கொண்ட அறைக்கு ரூபாய் 1000,ம் கட்டணம் ஆகவும்,2 பேர் தங்கி சிகிச்சை பெறும் அறைக்கு ரூபாய் 1500 கட்டணமாகவும், 4 பேர் தங்கும் அறைக்கு ரூபாய் 2000 கட்டணமாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த அறையில் தொலைக்காட்சி,சுடுதண்ணீர்,தனி கழிவறை,சோபாவசதி உள்ளிட்டவைகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் காஞ்சிபுரம், கோவில்பட்டி, கன்னியாகுமரி உள்ளிட்ட 10 மருத்துவ மனைகளில் கட்டண வசதி அறைகள் திறக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது.தமிழகத்தில் வேறு எங்கும் இல்லாத வகையில் பெண் மருத்துவர்கள் பெண் மருத்துவ மாணவர்கள் செவிலியர்கள் பணியில் இருக்கும் போது ஓய்வெடுக்கவும் உடை மாற்றுவதற்கும் தேவையான பின் சோன் (PINK ZONE) மையம் நெல்லை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அமைக்கப் பட்டுள்ளது.15 லட்சம் மதிப்பில் 5 பிங்க் சோன் அறைகள் முதல் கட்டமாக நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் திறக்கப்பட்டுள்ளது.

நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகே 72 கோடியே 10 லட்சம் செலவில் மருத்துவக் கல்லூரிக்கான புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இந்த கட்டிட பணிகள் மார்ச் மாத இறுதியில் முடிக்கப் பட்டு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட உள்ளது. புதிய கட்டிடத்தில் புதிதாக 400 படுக்கைகள் 10 அறுவை சிகிச்சை அரங்கம் போன்றவை அமையப் பெற உள்ளது.மொத்தமாக 104 கோடியே 69 லட்சம் மதிப்பீட்டில் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் புதிய கட்டிட பணிகள் நடந்து வருகிறது.1353 மருத்துவ பணியிடங்கள் தமிழகத்தில் காலியாக உள்ளது.2026 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி மேலும் 1200 மருத்துவர்கள் கூடுதலாக நியமிக்கப்பட வேண்டும். மொத்தமாக 2553 மருத்துவர் காலி பணியிடங்களை நிரப்ப ஜனவரி 27 ம் தேதி தேர்வு நடத்தப்பட்டு 100 சதவீதம் மருத்துவர்கள் நியமனம் செய்து முடிக்கப்படும். மருத்துவர்கள் தேர்வுக்காக 24000 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்.அதிகப்படியான விண்ணப்பம் வந்துள்ளதால 2 கட்டமாக தேர்வு நடத்தலாமா என ஆலோசனை நடத்தப்படுகிறது.ஆன்லைன் வழியில் இந்த தேர்வை நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதுபோன்று கிராம செவிலியர்கள் பணியிடங்களுக்கு தேர்வுகள் நடத்தப்பட்டு பணியாணை வழங்கும் நிலையில் உள்ளது.ஆனால் சிலர் பணி மூப்பு அடிப்படையில் பணி நியமனம் செய்ய வேண்டும் என வழக்கு தொடர்ந்த நிலையில் அவைகள் நிலுவையில் உள்ளது.வழக்கு தொடர்ந்தவர்கள் எங்களிடம் பேச்சுவார்த்தை நடத்த முன் வந்தால் அவர்களிடம் திறந்த மனதோடு பேச்சுவார்த்தை நடத்தி பணி இடங்களை நிரப்ப தயாராக உள்ளோம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,முன்னாள் சட்டப்பேரவை தலைவர் ஆவுடையப்பன்,நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் ப்ரூஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வகாப்,ரூபி மனோகரன்,மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன்,மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா,மருத்துவக் கல்லூரி முதல்வர் ரேவதி பாலன், மருத்துவக் கல்லூரி கண்காணிப்பாளர் சுப்பிர மணியன் உள்பட மருத்துவர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் ஒன்றியத்தில்

வாக்காளர்கள் சரிபார்ப்பு சிறப்பு முகாம்! அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

க.தேவராஜ் எம்.எல்.ஏ. – சி.என்.அண்ணாதுரை எம்.பி. – அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. – அ.செ.வில்வநாதன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருப்பத்தூர், நவ. 18-

வாக்காளர்கள் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் செய்ய மாநிலம் முழுவதும் சிறப்பு முகாம்கள் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் நடைபெற்று வருகின்றது. கழகத்தின் வாயிலாக அறிவித்த வாக்குச்சாவடி முகவர்கள் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை புரிந்திருந்த பொதுப்பணி நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி திருப்பத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட திம்மணாமுத்தூர் ஊராட்சியில் அமைந்துள்ள சின்ன பசலிக் குட்டை வாக்குச்சாவடிகள் 151,152 ஆகியவைகளை நேரடியாக சென்று பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை எம்.பி., மாவட்டச் செயலாளர் க.தேவராஜி, A. நல்லதம்பி, அ.செ.வில்வநாதன் மற்றும் தொகுதி பொறுப்பாளர்.ஜி.ரமேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

வாக்குச்சாவடியை பார்வையிட்ட பின் ஒன்றிய கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான A. நல்லதம்பி MLAவிடம் சட்டமன்ற தொகுதியில் அனைத்து வாக்குச்சாவடிகளில் கழகத்தின் BLA2,BLC முகவர்களின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். இதில் ஒன்றிய கழக சயலாளர்கள். கே.ஏ.குணசேகரன், க.முருகேசன், கே.எஸ்.ஏ.மோகன்ராஜ், ஒன்றிய சேர்மென்கள் விஜியாஅருணாசலம், திருமதி திருமுருகன் மற்றும் கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டில் 28 மாவட்டங்களில் மழை!

சென்னை, நவ. 18-

தமிழகத்தில் 28 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரி வித்துள்ளது. மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய இலங்கை கடலோரப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும். புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தமிழகத்தில் 28 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை, செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, கடலூர், மயிலாடுதுறை, அரியலூர், பெரம்லபூர், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, சிவகங்கை, நாகப்பட்டினம், விருதுநகர், கள்ளக்குறிச்சி, தருமபுரி, கரூர், நாமக்கல், சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி, தூத்துக்குடி, தேனி, கோவை ஆகிய 28 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

பண்ருட்டி சட்டமன்ற தொகுதி அண்ணா கிராமம் ஒன்றிய கிளை கழக செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி பாக முகவர்கள் கலந்தாய்வு கூட்டம், பாலூர் ருக்குமணி கிருஷ்ணா மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு அண்ணா கிராம ஒன்றிய கழக செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.கே.வெங்கட்ராமன் தலைமை தாங்கினார்.பண்ருட்டி சட்டமன்ற தொகுதி பார்வையாளரும் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் செ.புஷ்பராஜ் சிறப்புரை ஆற்றினார். பொதுக்குழு உறுப்பினர் என்.பலராமன்,பகுத்தறிவு பேரவை வழக்கறிஞர் மதனகுரு, அவைத்தலைவர் முத்து சங்கர், துணை செயலாளர்கள் உமையாள் ஆறுமுகம், ஆறுமுகம்,எஸ். வி.ராமர், மாவட்ட பிரதிநிதிகள் பைத்தாம்பாடி ராமு, புருஷோத்தமன், ராஜசேகர், பொருளாளர் ஜி.கே. ஸ்ரீதர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதில் ஒறையூர், பண்டரகோட்டை, தட்டாம்பாளையம், மேல்பட்டாம்பாக்கம், கண்டரக்கோட்டை, பாலூர், பி.என்.பாளையம்,திருத்துறையூர், தொரப்பாடி, சாத்திப்பட்டு உள்ளிட்ட 10 இடங்களில் பி.எல்.ஏ பாக முகவர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு நிர்வாகிகள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.